# குடும்ப, தார்மீக காரியங்கள் மற்றும் ஸமூக காரியங்களின் சாஸ்திரம்

(Spiritual science underlying familial religious and social acts - Tamil)

## முன்னுரை

‘சுகம் ந வினா தர்மாத்| தஸ்மாத் தர்மபரோ பவேத்||’ இதன் அர்த்தம் ‘உண்மையான சுகம் (ஆனந்தம்) என்பது தர்மவழியைப் பின்பற்றாமல் கிடைக்காது; அதனால் எப்பொழுதும் தர்மவழி நடக்க வேண்டும்’, என்பது ஸம்ஸ்க்ருத வசனம் ஆகும். வாழ்க்கை படகை நடத்தி செல்வதற்கு தர்மவழியை பின்பற்றுவது முக்கியம். தர்ம வழி நடப்பதற்கான சுலபமான வழிகளை, ஹிந்து தர்மம் பலவித தார்மீக காரியங்களின் மூலமாக அதாவது ஸன்ஸ்காரங்கள், பண்டிகைகள், விரதங்கள் போன்றவற்றின் மூலமாக கற்றுத் தருகிறது. தினஸரி தெய்வ பூஜை மற்றும் பண்டிகைகள், விரதங்கள் போன்ற உபாஸனைகளோடு கூட குடும்ப மற்றும் சமூக நிலையில் உள்ள தார்மீக காரியங்களின் மூலமாகவும் ஹிந்து தர்மம் தர்மபோதனையை வழங்குகிறது.

எந்த ஒரு அர்த்தமுள்ள காரியத்தையும் ஹிந்து தர்மப்படி அதாவது ஆன்மீக சாஸ்திரப்படி செய்வதால் அந்த காரியத்தின் மூலம் தெய்-வங்களின் ஆசீர்வாதம் கிடைப்பதோடு கூட தீய சக்திகளிடமிருந்தும் பாதுகாப்பு கிடைக்கிறது. இது போன்ற காரியங்கள் தனிமனித மற்றும் சமூக நிலையில் ஆன்மீக பலனை தருவதால் ஒரு விதத்தில் இது ஸமஷ்டி ஸாதனையாகிறது. இந்த நூலின் மூலம் பிறந்தநாள், ஆரத்தி, பரிசளிப்பது, வயதிற்கு தகுந்தாற்போல் சாந்தி விதி செய்வது போன்ற குடும்ப காரியங்கள் மற்றும் திறப்பு விழா, குத்துவிளக்கேற்றுதல், மரியாதை செய்தல், இரங்கல் கூட்டம் போன்ற சமூக காரியங்கள் செய்வதன் நோக்கம், ஆன்மீக சாஸ்திரப்படி அவற்றின் சரியான வழிமுறை மற்றும் அவற்றிலுள்ள உள்ளார்ந்த சாஸ்திரம் ஆகியவற்றை பற்றி தெரிந்து கொள்ளலாம்.சாஸ்திரத்தை அறிந்து கொண்டு அந்தந்த காரியத்தை ச்ரத்தையோடு செய்வதால் அதன் மூலம் கிடைக்கும் பலன் அதிகமாகிறது. ஸம்ஸ்க்ருத ஸ்லோகம் சொல்வதன் மஹத்துவம் மற்றும் ஆன்மீக விஷயத்தில் சொற்பொழிவு ஆகியவற்றுடன் நூல் கண்காட்சி, மக்கள் விழிப்புணர்வு போராட்ட ஊர்வலம், இரங்கல் கூட்டம் போன்ற நிகழ்ச்சிகளின்போது எந்த ஸ்லோகத்தை உச்சரிப்பது போன்ற தகவல்களும் இந்நூலில் கொடுக்கப்பட்டுள்ளன.

இன்று ஹிந்துக்கள் மேற்கத்தியரின் கைகளிலிருந்து தண்ணீர் வாங்கிக் குடித்துக் கொண்டிருக்கின்றனர். ஸ்வதர்மத்தை மறந்து ஹிந்து கலாச்சாரத்தை மறந்து மேற்கத்திய கலாச்சார மோஹத்தில் வீழ்ந்ததன் பலன் நம் தார்மீக காரியங்களில் பெரும் அளவு மேற்கத்திய கலாச்சார பாதிப்பு தெரிகிறது. பிறந்த நாளை ஆரத்தி எடுத்து கொண்டாடாமல் கேக் வெட்டி மெழுகுவர்த்தி ஊதி அணைத்து கொண்டாடுவது; திறப்பு விழாவை தேங்காய் உடைத்து அல்ல, ரிப்பனை வெட்டி கொண்டாடுவது; குத்துவிளக்கை எண்ணெய் தீபம் கொண்டு அல்ல, மெழுகுவர்த்தி கொண்டு ஏற்றுவது போன்ற உதாரணங்களால் இது தெளிவாகிறது. இது போன்ற காரியங்களால் சைதன்யம் கிடைக்காது என்பது நிச்சயம்; அதோடு கூட ஆன்மீக கண்ணோட்டத்தில் இக்காரியங்கள் எவ்வளவு தீங்கிழைக்கும் என்ற விஷயங்களும் இந்நூலில் சாஸ்திர ஆதாரத்துடன் கொடுக்கப்பட்டுள்ளன.

இந்நூலில் கொடுக்கப்பட்டுள்ள சாஸ்திரப்படி அனைவரும் காரியங்கள் செய்து வ்யஷ்டி மற்றும் ஸமஷ்டி நிலையில் உயர வேண்டும் என்றும் ஹிந்துக்களிடையே தர்மம் மற்றும் கலாச்சாரத்தின் மீது அபிமானம் வளர வேண்டும் என்றும் ஸ்ரீ குருசரணங்களில் ப்ரார்த்தனை செய்யப்படுகிறது. – **தொகுத்தவர்**

**குறிப்புகள்** 1. நூலின் பல இடங்களில் ‘ப.பூ. டாக்டர்’ மற்றும் ‘ப.பூ. டாக்டர் ஆடவலே’ என வருவது, இந்நூலின் தொகுப்பாளரான ‘ப.பூ. டாக்டர் ஜயந்த் ஆடவலே’ அவர்களைக் குறிக்கும்.

2. மற்ற பல நூல்களிலுள்ள சில விஷயங்கள் இதில் கொடுக்கப்பட்டுள்ளன. அத்தகைய விஷயங்களின் முடிவில் அடைப்புக் குறியில் ஒரு எண் கொடுக்கப்பட்டிருக்கும். அதன் விவரங்கள் நூல் முடிவில் குறிப்பேடுகளில் கொடுக்கப்பட்டுள்ளன.

3. இந்த நூலிலுள்ள அட்டவணைகளில் கொடுக்கப்பட்ட விகிதாசாரங்கள், தொகுப்பாளர் ப.பூ. டாக்டர் ஜயந்த பாலாஜி ஆடவலே அவர்களின் தியானத்தில் ஈச்வரனிடமிருந்து பெற்ற ஞானமாகும்.

## அத்யாயம் 1 : குடும்ப தார்மீக காரியங்களுக்கு ஆதாரமான சாஸ்திரம்

### அட்டவணை

(சில முக்கிய குறிப்புகள் * சின்னத்தின் மூலம் காட்டப்பட்டுள்ளது)


**1. பிறந்தநாள் 17**

* பிறந்தநாளின் சரித்திரம் மற்றும் மஹத்துவம் 18
* நக்ஷத்திரப்படி பிறந்தநாள் கொண்டாடுவதன் மஹத்துவம் 19
* பிறந்தநாள் கொண்டாடுவதன் விதமும் சாஸ்திரமும் 22
* பிறந்தநாள் கொண்டாடும்போது ஏற்பட்ட அனுபூதிகள் 28
* பிறந்தநாளன்று செய்யக்கூடாத சில செயல்களும் அதன் சாஸ்திரமும் 29
* மஹானின் பிறந்தநாள் 35
* குழந்தைகள், சம வயதினர், வயோதிகர், மஹான் ஆகியோரின் பிறந்தநாள் 36

**2. ஆரத்தி 38**

* ஆரத்தியின் ஆன்மீக அர்த்தமும் மஹத்துவமும் 38
* ஆரத்தியை யாருக்கு எங்கு செய்ய வேண்டும்? 38
* ஆரத்தி செயல்களுக்கு ஆதாரமான சாஸ்திரம் 43
* பல விதங்களில் ஆரத்தி செய்யும் நோக்கம் மற்றும் அதன் பரிணாமம் 52
* பூஜை, ஆரத்தி, மானஸ பூஜை, நினைவு கூரல், ஸ்மரணம் 54

**3. பரிசு அளித்தல் 55**

* 'பரிசு' என்பதன் அர்த்தம் 55
* பரிசு எவ்வாறிருக்க வேண்டும் ? எந்த உணர்வோடும் பரிசளிக்க வேண்டும்? 56
* பரிசின் மேல் ஏன் மஞ்சள்-குங்குமம் இடப்படுகிறது? 56

**4. சாந்தி விதி 57**

* நோக்கம் மற்றும் சாந்தி செய்யும் நாள் 57
* விதிகளோடு சம்பந்தப்பட்ட மந்திரங்களை ஜபிப்பதனால் ஏற்படும் பலன் 59
* சாந்திவிதியிலுள்ள சில காரியங்களின் சூட்சும பரிசோதனை 60
* முக்கிய தெய்வங்களின் ஆவாஹனம் மற்றும் பூஜையின்போது செய்யப்பட்ட சூட்சும பரிசோதனை 60

**5. ஸத்யநாராயண பூஜை 66**

* பண்டிகையின் முன்பு ஸத்யநாராயண பூஜை செய்வதன் முக்கியத்துவம் 66
* ஒரு இருப்பிடம் அல்லது நிறுவனத்தின் திறப்புவிழாவிற்கு முன்பு செய்யப்படும் ஸத்யநாராயண பூஜை 66
* நல்ல ஆரோக்கியத்திற்கும் இச்சை பூர்த்தியாவதற்கும் செய்யப்படும் கணபதி பூஜை 66

**ஸனாதன் நூல் ஸேவையில் பங்கெடுங்கள்!**

ஆர்வமுள்ளவர் விரைவில் ஈச்வரப்ராப்தி அடையவும், இந்த பூமியில் ஈச்வர ராஜ்ய ஸ்தாபனமாகவும் வழிகாட்டுதல் வழங்க 282 நூல்களை ஸனாதன் இன்றுவரை (டிசம்பர் 2015 வரை) வெளியிட்டுள்ளது. 3500 நூல்கள் வெளியிடக்கூடிய அளவு விஷய ஞானம் கிடைத்துள்ளது. இந்த ஞானத்தை நூல்களாக வெளிக்கொணர பலருடைய உதவி தேவைப்படுகிறது. அவரவர் விருப்பம் மற்றும் திறமைக்கேற்றபடி ஞானத்தை தொகுத்தல், சரிபார்த்தல், டி.டி.பி (ஈடுபட) மற்றும் பல்வேறு மொழிகளில் மொழிபெயர்ப்பு ஆகிய ஸேவைகளில் பங்கெடுக்கலாம். மராட்டி, ஹிந்தி மற்றும் ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழிபெயர்க்கத் தெரிந்தவர் இந்த தர்மபிரசார ஸேவையில் பங்கெடுத்துப் பயனடையலாம்.

**இதற்காக தொடர்பு கொள்ள :** 9444278471